10 APR 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 04 - 4 - 1997 இதழ்: 9

நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; துன்மார்க்கர் ஆளும்போதோ ஜனங்கள் தவிப்பார்கள்.

நீதிமொழிகள் 29: 2

## சுண்டிக்குளி யாழ். பரியோவானில் எஸ். ஜே. வி. செல்வாவின் ஞாபகார்த்த ஆராதனை

நம் நாட்டின் பெருந் தலைவர்களில் ஒருவரான தந்தை S. J. V. செல்வநாயகத்தின் கடந்த கால வரலாற்று நிகழ்வுகளையும், அவர் இந்நாட்டு மக்களுக்கு ஆற்றிய பங்களிப்புக்களையும் எடுத்துக் கூறும் ஆராதனை விழா யாழ் பரியோவான் ஆலயத்தில் நடைபெற்றது

தந்தை S. J. V. செல்வநாயகம் அவர்களின் ஆண்டு நிறைவு ஞாபகார்த்த ஆராதனையும், நன்றி செலுத்தும் வழிபாடும கடந்த 31- 3- 97 மாலை 3- 30 மணியளவில் சுண்டுக்குளி யாழ் பரியோவான் ஆலயததில் இடம் பெற்றது-

மக்கள் பெருந்திரளாகக் கூடிய அன்றைய ஞாபகார்த்த ஆராதனையில் யாழ் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி D. J. அம்பலவாணர் தந்தை செல்வாவின் ... நறிப்படுதல்களையும் சேவையையும் எடுத்துக் கூறி பாராட்டுரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து இறைச் செய்தியை யாழ் மறை மாவட்ட றோமன் கத்தோலிக்க ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி தோமஸ் சவுந்திரநாயகம் இறை செய்தியை வழங்கினார்.

யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த நிறைவு ஆராதனையை ஒன்றிய செயலாளர் வண சொ. மில்ரன் ஒழுங்கு படுத்தினார்.

## இசை நாடகம்

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீன சமயக் கல்விக்குழுனால் ஒழுங்கு செய்யப்பட்ட உயிர்த்தெழுந்த திருநாள் பஜனையும் இசை நாடகமும் உடுவில் மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில் மார்ச் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3 00 மணிக்கு நடைபெற்றது. பெருந் தொகையான மக்கள் இந்நிகழ்ச்சிக்கு சமூகமளித்திருந்தனர். அதி வண கலாநிதி D. J. அம்பலவாணரின் இறையாசியுடன் மாலை 5. 30 மணிக்கு இனிதே நிறைவேறியது. சமயக்கல்விக்குழு இயக்குனர் திரு. G. இராஜநாயகம் இந் நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தார்.

## சுவிசேஷபணி

வண D R அம்பலவாணரின் தலைமையில் இறையியல் கல்லூரி இன்பச் சோலை, (முதலிகோவிலடி, வட்டுக்கோட்டை) யில் சுவிசேஷப் பணி பரப்பும் நிகழ்வு 2. 4, 97 அன்று மாலை 4. 00 மணி தொடக்கம் 6மணிவரை சிறப்பாக நடைபெற்றது. 200க்கு மேற்பட்ட கிராம மக்கள் தேவ செய்தி கேட்டு தேவாசீர்வாதம் பெற்று சென்றனர்.

## அறிமுகம்

பேராயர் கலாநிதி எஸ ஜெபநேசனின் பேரார்வத்தாலும், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா (எம். ஏ) வின் உழைப்பாலும் எமது அமெரிக்க இலங்கைமிஷன் அச்சகத்தில் 'நொறுங்குண்ட இருதயம்' நாவல் மறுபதிப்பு செய்யப்பட்டு கடந்த 22- 2- 97 அன்று யாழ் பல்கலைக் கழகத்தில் அறிமுக விழா நடைபெற்றது. நாவலின் அறிமுக உரையை பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் வழங்கினார் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம் வாழ்த்துரை வழங்கினார். திரு எஸ். சிவலிங்கராஜா ஏற்புரை வழங்கினார்.

1914 இல் எழுதப்பட்ட ஈழத்தின் முதலாவது சமூக நாவலாக இந்நூல் கருதப்படுகிறது. இந் நாவலை எழுதியவர் மங்களநாயகம் தம்பையா என்ற பெண் எழுத்தாளராவார். இவர் தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்டவர்

## விளையாட்டுப்போட்டி

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் 243 புள்ளிகளைப் பெற்ற பேர்ச் இல்லம் முதலாம் இடத்தையும் குட்சைல்ட் ஒவ்வின் போட்ஸ், கபிட்டர், ஆகிய இல்லங்கள் 196, 185, 155 புள்ளிகளைப் பெற்று 2ம், 3ம், 4ம் இடங்களைப் பெற்றன-

## ஹரியற் வின்ஸ்லோ அம்மையார் நினைவு

S. ஜெபநேசன் எழுதும்



| | |
|---|---|
| பிறப்பு: | 9- 4- 1796 நோர்விச் அமெரிக்கா |
| கன்னிப்பெயர்; | ஹரியட் வாட்ஸ்வேர்த் லத்றொப் |
| திருமணம்: | வண கலாநிதி மைரன் வின்ஸ்லோ 11- 1 1816 |
| இலங்கை புறப்பாடு பொஸ்டன் துறைமுகம்: | 8- 6- 1819 |
| கலகத்தா அடைதல்: | 24- 10- 1819 |
| யாழ்ப்பாண்ம் வரல்: | 17- 2- 1820 |
| உடுவில் செல்லுதல்: | 15- 4- 1820 |
| பாடசாலையின் தோற்றம்: | 28- 1- 1824 |
| முக்கியமான நூல்: | திருமதி ஹரியட் வாட்ஸ் வேர்த் வின்ஸ்லோவின் நினைவலைகள் பதிப்பு 1835 |
| பிள்ளைகள்: | மூன்று பெண்கள் |
| சார்ல்ஸ் மரணம், கடுந்துயர்: | 8- 7- 1832 |
| மறுமைப் பிரவேசம்; | 14- 1- 1833 |

ஹரியட் வின்ஸ்லோ அம்மையாருக்குப் பிடித்த வசனங்கள், பாடல்கள்

## பேராயர் காரைநகர் விஜயம்

கடந்த 25- 3- 97 பேராயர் அதி வண கலாநிதி S. ஜெபநேசன் வண E. P. சொலமன் வண P J. சூரியகுமார், N. V. ஜெயகுமார் ஆகியோர் காரைநகருக்கு விஜயம் செய்தார்கள். காரைநகர் தென்னிந்திய திருச்சபை ஆலயத்தை பார்வையிட்ட பேராயர் வருகிற நாட்களில் தென்னிந்திய திருச்சபையின் அபிவிருத்தி ஆன்மீக வளர்ச்சிப் பற்றி அம்மக்களோடு கலந்துரையாடினர்.

## ஈஸ்டர் பஜனை

தென்னிந்திய திருச்சபை சாவகச்சேரி திருச்சபையால் ஈஸ்டர் பஜனை மார்ச் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி ப. 3- 00 மணியளவில் சபை மண்டபத்தில் வண தேவ அருட்செல்வன் அவர்களின் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. இவ்விழாவிற்கு சபையோரும் அநேக அயலவர்களும் சமூகமளித்திருந்தனர். ஒய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளின் நடனம், நாடகங்கள், பாடல்கள், கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெற்றன சபைக்குரு வண P. R. நவீந்திர அனுகூலனின் தேவாசீர்வாதத்துடன் மாலை 5 30 மணிக்கு இனிதே நிறைவுற்றது

## கிரான் பெண்கள் இல்லம்

கிழக்கு மாகாணத்தில் எம் ஆதீனம் ஓர் பெண்கள் இல்லத்தை 45 பிள்ளைகளுடன் ஆரம்பித்துள்ளது. இப் பெண்கள் இல்லம் கிரான் ஆச்சிரமத்துக்கருகில் ஆதீனத்துக்குச் சொந்தமான நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு இக் கட்டட திறப்பு விழா 24- 02- 97 அன்று காலை 11 மணிக்கு இலங்கைத் திருச்சபைகளின் பிள்ளைகள் நலன் சங்கப் பணிப்பாளர் (SLCCCA) திரு A. N. S. ஜீவஜோதி திறந்து வைத்து பேசும் போது கிரானில் இருந்தும் அயற் கிராமங்களிலும் இருந்தும் மக்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆதனம் இந்த இடத்திற்கு வந்து புதிய புதிய பணிகளை ஆரம்பிப்பது மிகவும் மகிழ்ச்சியான ஓர் நிகழ்ச்சியும் ஓர் பெரிய சவாலையும் மக்களுக்கு கொடுத்து இருக்கிறது என்றார்.

இவ்விழாவிற்கு அருட்திரு S. ஜெயநேசன் தலைமை தாங்க ஆரம்ப ஜெபத்தை சேவக் சாம் அல்பிரட் (சாம் அண்ணா) நடாத்த ஜீவஜோதி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பின்னர் பிள்ளைகளின் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது இவ்விழாவிற்கு திட்ட பொறுப்பாளர் C-

(4ம் பக்கம் பார்க்க)

## திருச்சபை ஐக்கியத்தின் பொன்விழா ஆண்டு 1947 - 1997

# கிறிஸ்தவ நாகரீகம் - சொற் களஞ்சியம்

21.02.97 இன் தொடர்ச்சி

தமிழ்நேசன் - கொழும்புத்துறை

கிறிஸ்தவ மன்ற ஆய்வுத் தொடரில் மூன்றாவது வெளியீடாக வந்துள்ள இன்நூலானது இன்னுமொரு பயனுள்ள, அவசியமான ஓர் படைப்பாகும். அறிவுலகில் உள்ள ஒவ்வொரு இயற்துறைகளிலும் மேலெழுகின்ற புதிய சிந்தனைகளையும், எண்ணக்கருவூலங்களையும் உரிய முறையில் வெளிக் கொணர்ந்து வெளிப்படுத்துவதற்கு அந்த ஆந்தந்தத் துறை சார்ந்த புதிய சொல்லாக்க முயற்சிகள் இடம்பெறுவது இன்றியமையாதது. இம் முயற்சியானது அந்த அந்த மொழியை வளர்த்து வளப்படுத்துவதோடு புதிதாகப் பிரசவிக்கப்படுகின்ற துறைசார்ந்த கருத்துக்களையும் ஆய்வுகளையும் சரியாக உள்வாங்கி விளங்கிக் கொள்ளவும் உதவி செய்கின்றது.

ஆங்கிலம் — தமிழ் அகராதிகளின் வரலாற்றுப் பின்னனியிலே சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1965ல் வெளியிடப்பட்ட ஆங்கிலம் தமிழ்ச் சொற்களஞ்சியமே தமிழ் கூறும் நல்லுலகெங்கும் சிறந்த அகராதியென அறியப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ் அகராதியின் இறுதி மீள் பதிப்பானது பலவித திருத்தங்களுடனும், புதிய சொல்லாக்கங்களுடனும் 1992ல் வெளிக்கொணரப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மட்டத்திலான அறிஞர் பெருமக்களின் இந் நூலின் ஆலோசனைக் குழுவிலே தனிநாய அடிகளாரும் அங்கம் வகித்திருந்தார். ஆயினும் இச் சொற்களஞ்சியத்தின் பிற்கால மீள் பதிப்புகளிலே கிறிஸ்தவம் மற்றும் இறையியல் தொடர்பான சொற்களில் திருத்தங்கள் மேற்கொண்டதாகவோ அல்லது புதிய சொல்லாக்க முயற்சிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவோ தெரியவில்லை இன் நிலையில் கிறிஸ்தவ சமயம இயற்கல்வியின் வெவ்வேறு கிளைகளைச் சார்ந்த சந்திரகாந்தன் அடிகளுடைய இச் சொற்பட்டியலானது தமிழ்க் கிறிஸ்தவ அறிவுலகிலே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன் முயற்சியாகும் இறையியற் சொல்லாக்கல் தொடர்பான ஆய்வுப் பாதையின் நீண்ட பயணத்திலே இந் நூலைப் ஒரு ஆரம்ப முயற்சியாகக் கொள்ளலாம்.

ஆய்வுத் துறையில் ஆர்வமும் புலமையும் கொண்டு விளங்கும் சந்திரகாந்தன் அடிகளார் இவை போன்ற இன்னும் பல நூல்களை தமிழுலகிக்கு தமிழ்க் கிறிஸ்தவ உலகிற்கும் அளிப்பாராக.

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று

இன்று பலரிடயே ஆலய வழிபாடு அற்ற ஒரு சூழமைமவே காணப்படுகிறது. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், என்றார்கள் நம் முன்னோர்கள். இன்று கோயில் உள்ள ஊரிலேயே கோயிலைத் தேடுவோரே மிகவும் அரிதாய் தென்படுகிறது.

வாலிபனே உன் வாலிப வயதில் சிருஷ்டிகரை நினை. இன்று வாலீபர்கள் ஐந்து நிமிடமாவது ஆலயம் சென்று இறைவனை நினைக்காமல் ரியுசன், சினிமா பார்த்தல் ஏனைய களியாட்டங்களில் நாட்டம். சோதரரே! இறைவனின் ஆட்சி சீக்கிரமாய் நெருங்கிறது. உன் அகம் எங்கே இருக்கிறது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது முதுமொழி. ஒரு புதிய கருத்துடன் இது இப்பொழுது நிரூபிக்கப்படுகிறது. வட கரலைனா சர்வ கலாசாலையின் பேராசிரியர் கலாநிதி பேற்றன் கப்ளான் என்பவர் ஆலயம் போய்த் தொழுவது ஆத்ம சுகத்திற்கும் மிகவும் உதவியான ஒரு காரியமெனக் கூறுகிறார். வாரத்தில் ஒரு முறையாவது ஆலயத்திற்குப் போவோருடன் அதற்கும் குறைவாக இடையிடையே மாத்திரம் போகும் பலரை ஒப்பிட்டு ஆராய்ச்சி நடத்திய பின் ''பக்தி சுகத்திற்கு நல்லது'' என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

வழமையாக ஆலயம் போய்த் தொழுவோர்க்குக் குருதி அமுக்க அளவு செவ்வையாயிருப்பதாகவும் ஆலய வணக்கத்திற்கு கரிசனையற்றிருப்பவர் அளவு கடந்த குருதியமுக்கத்தினால் ஏற்படும் பல கோளாறுகளைக் கண்டுள்ளதாகவும் அவர் செய்த ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது 400 பேரை அடிப்படையாயிக் கொண்ட இந்த ஆராய்ச்சியின் முடிவு ஆலய வணக்கத்தை அலட்சியம் செய்வோரைச் சிந்திக்க வைக்க வேண்டியவொன்று.

ஆதாரம்:- திருச்சபை தூது சஞ்சிகை

ஆக்கம்

கு. ஐ குமரேசன்

## புனித யோவான் ஊறணி பெண்கள் இல்லம்

மட்டக்களப்பு ஊறணியில் நடைபெற்று வருகின்ற புனித யோவான் பெண்கள் இல்லத்தின் முடிக்கப்படாமல் இருந்த சகல வேலைகளும் முடிக்கப்பட்டு புதிதாக மூன்றாம் மாடிக் கட்டடமும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் 50 பெரிய மாணவிகள் தங்கக் கூடிய சகல வசதிகளுடன் அமைந்துள்ளது இந்த புதிய மாடிக் கட்டட திறப்பு விழாவை இலங்கை திருச்சபைகளின் பிள்ளைகள் நலன் சங்கப் பணிப்பாளர் (SLCCCA) A. N. S. ஜீவஜோதி 23-1-97 அன்று மாலை 4 மணிக்கு திறந்து வைத்தார். 140 பிள்ளைகள் வரவேற்பு செய்து அணிவகுத்து நிற்க சபைக்குரு எஸ் ஜெயநேசன் தலைமையில் இவ் விழா நடைபெற்றது உதவிக் குரு டி- எஸ் மதியாபரனம் திருமறைப் பாடம் வாசித்தார் திட்டமிடல் பொருப்பாளர் சி. அருமநாயகம் SLCCCA ஸ்தாபனத்தின் பணிப்பாணிளர் ஜீவஜோதிக்கும் எமது அதியட்

4ஆம் பக்கம் பார்க்க

# இந்தக் குளத்தில் கல் எறிந்தவர்கள்

சில வருடங்களுக்கு முன்னர் கவிஞர் வைரமுத்து தமது வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய அறிஞர்களைப் பற்றி ஒரு நூல் எழுதி அதற்கு இந்தக் குளத்திலே கல்லெறிந்தவர்கள் என்று மகுடமிட்டு வெளியிட்டார். 57 வயது நிறைவுற்ற இக்காலை வேலையில் என்னை மிகவும் கவர்ந்த சிந்தனையாளர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

புதிய ஏற்பாட்டு அறிஞர் வில்லியம் பார்க்ளே (BARCLAY) யின் தெளிவு, ஞானம், ஆழ்ந்த புலமை. அவர் நூல்களெல்லாமே என்னை வளர்த்தவை. அவ்வாறே நகைச்சுவையை இழையோடு விட்டு எழுதும் புதிய ஏற்பாட்டு அறிஞர் A.M.ஹன்ரர்(HUNTER) என் னுள்ளத்திற் குடியிருப்பவர்.

டாக்டர் ஜி. யூ. போப் எனது நீண்ட கால நண்பன்! எனது 23 வயதிலேயே இவரைப்பற்றிக் கட்டுரைகள் எழுதினேன். ஒக்ஸ் போர்டில் இவரது சமாதியைச் சுத்தம செய்து மலர்வளையம் வைத்தேன். போப் ஐயர் வாழ்க!

ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ் டோய்; நான் பதின்மூன்று வயதிலிருந்து டால்ஸ்டோயின் ரசிகன். எளிமையாகவும் இனிமையாகவும் உயர்ந்த கருத்துக்களை வழங்குவதில் வல்லவர். டால்ஸ்டோயின் நூல்கள் அவரது மனத் தூய்மையையும் எளிமையான வாழ்க்கை முறையையும் காட்டுவன ரஷ்யா, உலகுக்களித்த மாணிக்கம் லியோ டால்ஸ்டோய்:

தத்துவ நூல்களை எழுதிய நோர்மன் வின்சன்றபீல் டேல் காணாகி இருவரும் சோர்வுற்ற நேரத்தில் எனக்குத் துணைபுரிவர்கள். கானாகியைப் பற்றி 12 வயதில் கேள்விப்பட்டேன். தினந்தோறும் அவர் பெருமையை உணருகிறேன் கானாகி மகா மகா பெரியவர்!

ஆங்கிலச்கவிஞர்களில் ரெனிசன், வோல்ற் விட்மன் A போப் லோங்பெலோ, கிறிஸ்ரினா றொசற்றி எல்லாரையும் நினைத்துப் பார்க்கிறேன்.

இந்திய சுதந்திர இயககம் ஒரு கட்டத்தில் என் உள்ளத்தில் நிறைந்திருந்து – நீதி வழுவாத நேரு மூதறிஞர் ராஜாஜி, தாகூர் இக்பால் எல்லாரையும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூறுகிறேன்

**பேராயர் எஸ். ஜெ தமது 57வது நிறைவையொட்டி 28- 3- 97 காலை எழுதியது.**

ஆங்கில அகராதி தொகுத்த டாக்டர் சாமுவேல் ஜோன்சன் ஒரு மகான். இவரைப்பற்றி எழுதத்தொடங்கியவுடனேயே இரண்டு கண்ணீர்த் துளிகள் கடதாசியில் விழுந்துவிட்டன. எனது இலட்சிய புருஷன் டாக்டர் சாமுவேல் ஜோன்சன். இவருடைய வாழ்க்கை வரலாற்றினை இளைஞர்கள் படிப்பார்களாக!

சார்லஸ் டிக்கன்ஸ், மார்க் டுவைன் ஆகியோர் தமது எழுத்துக்களால் உலகை சிரிக்கவைத்தவர்கள். சோர்வுக்கு இவர்களின் நூல்கள் சிறந்த ஒளடதம்.

பத்தொன்பததம் நூற்றாண்டு மிஷனரி இயக்கம் எனனைப் பெரிதும் கவர்ந்தது. ஹரியட் வின்சிலோ அம்மையார், லீச் சகோதரிகள், பூவர் ஸ்போல்டிங் ஆகியோர் அன்பு நிறைந்தவர்கள். மாசற்றவர்களாய் இந்த உலகில் உலாவியவர்கள்.

நான் தமிழ் இலக்கிய சோலையிலே நீண்ட காலம் நடந்தவன். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்பதில் எனக்கு பூரண உடன்பாடு.

'‚தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு''

இப்படி எழுதக்கூடியவன் தெய்வப்புலமை பெற்றவன் மாணிக்க வாசகர் சி சுப்பிரமணிய பாரதி, மு வரதராசன் எல்லோருமே போற்றுதற்குரியவர்கள். சமுதாயத்தின் பச்சை உண்மைகளைப் பிளந்து காட்டிய புதுமைப்பித்தனுக்கு நான் கடனாளி. கிறிஸ்தவ கம்பர் H A K. வேதநாயக சாஸ்திரி ஆகியோரின் பாடல்கள் எனக்கு ஆன்மீக உணவு அளிக்கின்றன.

வாழ்க்கையிற் சந்தித்தவர்கள் அனேகர்! ஆசிரியர்கள், நண்பர்கள், மதகுருமார் எல்லாருக்காகவும் இறைவனைப் போற்றுகிறேன்.

ஐரோப்பிய வரலாற்றினை எனக்கு அறிமுகம் செய்துவைத்த S. V. B, தமிழிலே நான் பாண்டித்தியம் பெற வழிவகுத்த டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் V. N. A மற்றும் K. E. M. பல்கலைக்சழகத்திலே என்னைப் பெரிதும் கவர்ந்த மதகுரு லக்ஸ்மன் விக்கிரமசிங்கா, வரலாற்றுத்துறைத்தலைவர் லப்றோய், தமிழ்த்துறையை அலங்கரித்த அரியநண்பன் சு வித்தியானந்தன் இவர்களை நான் மறக்கமுடியுமா?

மார்க்க சகாயர்களாக விளங்கிய பேராயர் சபாபதி குலேந்திரன், துணிவும் ஆற்றலும் நிறைந்த வண. A. C. T சிரித்து வாழ்ந்த துறவி பெரியண்ணன், செல்வரத்தினம் எல்லாரையும் நினைத்துப்பார்க்கிறேன்.

சிரிப்பூட்டுபவர்கள் எனக்கு நண்பர்கள். ஆங்கில திரையுலகிலும் தமிழ் திரையுலகிலும் கொடிகட்டிப் பறந்த நகைச்சுவையாளர்கள் Peter zellers உட்பட எல்லோருமே எனக்கு வேண்டியவர்கள்- மனம் கறுப்பா சிவப்பா? ... பதை எடுத்துக்காட்டும் கண்ணாடிச்சிரிப்பு என்று எடுத்து விளம்பிய N S K பாராட்டுக்குரியர். K A T குருவை மிஞ்சிய சீடன்.

(4ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
நல்லூர் ஜெ நூலகம்



வாழ்க்கைக் கலை என்பது மல்யுததம் போன்றதே அன்றி, நாட்டியம் போன்றதன்று, முதலில் உறுதியாக நிற்க வேண்டும். பிறகு திடீர்க் தாக்குதலை எதிர்பாத்துத் தயாராக இருக்க வேண்டும்.

மார்க்ஸ் அரேலியஸ்

# உதயதாரகை

## புது வாழ்வு

தென்னிந்திய திருச்சபை சமயக்கல்விக் குழுவினர் தாம் தயாரித்தளித்த இசை நடகத்திற்கு புதுவாழ்வு என்று மகுடமிட்டனர். கிறிஸ்துவின் வருகையும், பாடுகளும் மரணமும் அருமையான உயிர்தெழுதலும் நமக்கு புதுவாழ்வை தந்தன.

கிறிஸ்து மரணத்தை வெற்றி கொண்டார் எனும் நம்பிக்கையே பயந்து போயிருந்த சீடர்களுக்குத் தைரியத்தை கொடுத்தது. பெரிய வியாழன் முதல் பரிசுத்த சனிக்கிழமைவரை ஓடியோடி ஒழித்துக் கொண்டிருந்த சீடர்களுக்கு உயிர்த்தெழுந்த காட்சியே நம்பிக்கையை கொடுத்தது. இல்லாவிட்டால் கிறிஸ்தவ இயக்கம் பெரிய வெள்ளியோடு முடிந்து போயிருக்கும் இதனாலே தான் பவுலடிகளார்

கிறிஸ்து எழுந்திருக்க வில்லையென்றால் எங்கள்
பிரசங்கமும் விருதா உங்கள் விசுவாசமும்
விருதா, மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால்
தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர்
எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக்
குறித்து சாட்சி சொன்னதினாலே
தேவனுக்காகப் பொய்ச் சாட்சி
செல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே

என்று கொரிந்து சபையாருக்கு எழுதினார் (1கொரி 15;14)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்டு உணர்ந்தவர்களே சீடர்களாக இருக்க முடியும் என்று பழம்பெரும் அப்போஸ்தலர்கள் தீர்மானித்தனர் இதனாலே தான் யூதாசின் இடத்துக்கு புதிய ஒருவரை தெரிவு செய்ய முன் அவர் உயிர்த்தெழுதலை கண்டவரா என ஆராய்ந்து பார்த்தனர்

இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் நமக்கு நியாயப்பிரமாணத்தில் இருந்தும் பாவத்தில் இருந்தும் மரணத்தில் இருந்தும் விடுதலையை தந்தன. இந்த நம்பிக்கைதான் கிறிஸ்தவர்கள் உலகுக்கு வழங்கும் நற்செய்தி.

இன்று கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பலர் பலவாறு சித்திரிக்கின்றனர் அப்போஸ்தலர் காலத்திலிருந்து இவ்வகையான கொள்கைக்காரர் இருந்திருக்கின்றனர். ஆனால் கடந்த 2000 வருடங்களாக கோடான கோடி பக்தர் கிறிஸ்தவன் உயிர்தெழுதலை அறிக்கையிட்டு சீரிய வாழ்வு பெற்றனர். இறந்தவர் மரிப்பது பொது மரபு

மரித்தவர் உயிர்ப்பது தனிச்சிறப்பு யேசுவின் உயிர்த்தெழல் பெரும் நிகழ்ச்சி அவர் நேசரின் வாழ்விலும் வரும் நிகழ்ச்சி

இதுவே உயிர்த்தெழுந்த திருநாளின் நற்செய்தியாகும். இந்த நம்பிக்கையை உடையவர்களாக இருந்தால் நாம் எதனைக்கண்டும் அஞ்சமாட்டோம். பொன்னும் வெள்ளியும் என்னிடத்தில் இல்லை. நசரேயனாகிய யேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட என சொல்லக்கூடிய வைராக்கியத்தை நாம் பெற்றுவிடுவோம்.

எல்லவிதமான அனுபவங்களுக்குப் பின்னும் பவுல் அப்போஸ்தலன் ''ஆனாலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய் நமக்கு ஜெயம் கொடுக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' என்றார். இதனையே நமது திருச்சபை முதலாவது பேராயர் இன்பத்திலும் துன்பத்திலும் கூடிவாழ்ந்தார். இயேசுவின் உயிர்த்தெழுதலை உண்மையாய் விசுவாசிக்கிறவன் கிறிஸ்து எனக்கு ஜீவன் மரணம் எனக்கு ஆதாயம் என்று மகிழ்ச்சியோடு கூறுவான். அந்த நம்பிக்கையோடு மனோரம்மியமான வாழ்வு இதனையே நித்திய ஜீவன் என்றும் கூறுவர் இதனை நமக்களித்த தேவகுமாரன் நம் உள்ளத்திலே இருத்துவோமாக.

## பொறுமை -

எல்லாரும் நிலைமாறித் தடுமாறும் போது – உன்
சிந்தனையைத் தெளியவைத்துத் தூண்டுவது பொறுமை.
குறைகூறி குற்றஞ்சாட்டி சந்தேகிக்கும் போது – [illegible]னை
நிறைவான நம்பிக்கையோடு நிற்கச் செய்வது பொறுமை
காத்திருந்துப் பூத்துப்போன கண்கள் மங்கும் போது
காணாததைப் பற்றிக்கொண்டு பூக்கச் செய்வது பொறுமை
விரோதங்கள் துரோகங்கள் மாரியாகும்போது
பரலோக அன்பைப் பரிமாறச் செய்வது பொறுமை.

வாக்குத்தத்தம் வாடிப்போன தாகச்சாணும் போது – உன்
விசுவாசத்தை எண்ணெயூற்றி வார்த்துவிடுவது பொறுமை.
வெற்றிகளும் தோல்விகளும் மாறி மோதும் போது – உன்னை
வீரமாக இரண்டையுமே ஏற்கச் செய்வது பொறுமை
சொன்ன வார்த்தை திரிக்கப்பட்டு சூழ்ச்சியாகும் போது – அதைச்
செய்தவரைப் பரிவோடு திருத்திச் செய்வது பொறுமை.
வாழ்வெல்லாம் வியர்த்துக் கட்டின வேலை சிதறும் போது
பாழானே னென்னாமல் துவங்கச் செய்வது பொறுமை

பரிசுப்பொருளைப் பெரிதாக எண்ணாமல் முன்னே
பாய்ந்து சென்று ஆபத்தில் துணிவதுமோர் பொறுமை.
தோல்விகளைப் பாராமல் திரும்பத் திரும்பச் செய்தும்
போலியாக வெற்றிக் கொடி நாட்டாததும் பொறுமை
முறைவந்தும் யாரும் உன்னைக் கவனியாத போது
முறையிடாமல் கடனாகப் பணிசெய்வதும் பொறுமை,
உள்ளந்திரியும் காலியாகி வெறுமையாகும் போதும்
விடுவதில்லை நிற்பேனென்ன வீறுசொல்வதும் பொறுமை.

கூட்டத்தோடு சென்றாலும் குணநலனைக் காத்து
இராஜவோடு நடந்தாலும் தழ்மையுடை போர்த்து
எதிரியிடம் நண்பனாக முகமுகமாய்ப் பார்த்து
நேசிக்க முடியாருடன் கையோடுகை கோர்த்து
மன்னிக்க முடியாரை உன் கூட்டோடு சேர்த்து
பழிவாங்கத் துடிக்காமல் தீய செயலை வெறுத்து
திட[illegible]னதாய் தைரியமாய் நின்றால் நீ பொறுத்து
பொறுத்தவரே பூமியாள்வார் என்ற வாக்கை எடுத்து
வாகையாகச் சூடிவி கடலென்னும் பொறுமை

நன்றி ''ஆசீர்வாதம்'' சஞ்சிகை

தொகுப்பு வண. ரி. ஜே.

## அப்போஸ்தலர் மரித்த விதங்கள்

**அந்திரேயா**
அகாயாவிலுள்ள பத்ராவில் ''X'' வடிவச்சிலுவையில் கட்டி தொங்கவிடப்பட்டான்.

**பர்தலமேயு (நாத்தான் வேல்)**
ஆர்மீனியாவில் உயிரோடு தோலுரிக்கப்பட்டான்.

**யாக்கோபு (யோவானின் சகோதரன்)**
அகிரிப்பா இராஜாவினால் எருசலேமில் தலைவாங்கப்பட்டான்

**யாக்கோபு (கிலேயோப்பா – மரியாள் மகன்)**
தேவாலயத்தின் உச்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டு கல்லெறியுண்டான்.

**யூதா [ததேயு]**
ஆர்மீனியாவில் அம்புகளால் எய்யப்பட்டுக் கொல்லப்பட்டான்

**மத்தேயு**
பார்தியாவில் பட்டயத்தால் கொல்லப்பட்டான்.

**பேதுரு**
ரோமாபுரியில் தலைகீழாகச் சிலுவையிலறையப்பட்டான்.

**பிலிப்பு**
பிரிஜியாவிலுளள இராப்போலியில் தூணொன்றில் தூக்கிலிடப்பட்டான்.

**சீமோன (செலோத்தே)**
பாரசீகத்தில் அவனது 129ம் வயதில் சிலுவையிலறையப்பட்டான்

**தோமா**
இந்தியாவில் அ[illegible]பினால் கொலை செய்யப்பட்டான்.

**மத்தியாஸ்**
கல்லெறியப்பட்டு தலைவாங்கப்பட்டான்.

**பவுல்**
ரோமாபுரியில் தலைவாங்கப்பட்டான்.

**யோவான்**
இயற்கையாய் மரித்தான்.

**நீங்கள்?**

# சிறார் சோலை



அன்பான தம்பி தங்கைகளே!

இவ்வார சிந்தனைக்கு:- ‘உன்னிடம் எத்தனை பதக்கங்கள், பட்டங்கள், நற்சான்றிதகள் இருக்கின்றன என்று கடவுள் கவனிப்பதில்லை. எத்தனை தியாகம், தொண்டு, தழும்புகள் உள்ளன. என்று தான் கவனிக்கிறார்’’ (ஜே. ரி).

சென்ற முறை ஒரு விகடமான கதை ஒன்று கேட்டோம். இம்முறை ‘சாது சுந்தர் சிங்’ எனும் கிறிஸ்துவின் அடியார் பற்றிப் பார்ப்போம். சாது சுந்தர் சிங் 1889 ம் ஆண்டில் பாட்டியாலா நகரில் பிறந்தார். தனது சமயத்தின் மீது ஆழ்ந்த பற்றுதல் கொண்ட ஒருவராக இவர் திகழ்ந்தார். கிறிஸ்தவ சமயம் என்பது அவரது கண்ணிலேயே தென்பட இயலாத ஒன்றாக அவருக்கு இருந்தது இந்து மார்க்க நூல்கள் பலவற்றை ஆழ்ந்து கற்றார். ஒரு தறுவாயில் வேதாகம புதிய ஏற்பாட்டுப் பிரதி ஒன்றை தீயிட்டுக் கொழு தும் அளவு கிறிஸ்தவத்தின் மீது மிகுந்த வண்மம் கொண்டிருந்தார் சுந்தர் சிங் எனினும அவரது மனம் பல்வேறு அலைச்சல்களால் நிரம்பியது. அமைதி அற்ற ஒரு சூழ்நிலையை தன் வாழ்விலே உணர்ந்து கொண்டார். தனது உயிரை மாய்த்துக் கொள்ளும் வண்ணம் தண்டவாளத்தில் தலைவைக்க எண்ணிய சாதுவை இயேசுபெருமான் ஆட்கொண்டார். மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட சுந்தர் 1905 ம் ஆண்டில் கிறிஸ்தவராகி அருந் தொண்டாற்றினார்.

பாரத்தீர்களா அன்பான தம்பி தங்கைகளே – கடவுளால் இயலாத காரியம் ஒன்றும் இல்லை எம்மை நாம் முற்று முழுதாக இறைவனிடத்தில் ஒப்படைத்து விடுவோமா?

சிந்திப்போமா? செயற்படுவோமா ? ?

✲ ✲ ✲ ✲ ✲ ✲

## சிறுவர் சிரிப்பு

அம்மா:- சங்கக் கடையில் வாங்கிக்கொண்டு வந்த ரவையை எதுக்கடா கிளறிக் கொண்டிருக்கிறாய் ?

மகன்:- மீன் பிடிக்கப்போகிறேன்... தூண்டிலில் மாட்ட புழு தேவைப்படுகிறது (ஜே. ரி.)

✲ ✲ ✲ ✲ ✲ ✲

## சென்றவாரப் புதிரின் விடை

நகோமி

## இவ்வாரப் புதிர்

127 நாடுகளை ஆண்ட அரசன் (வேதத்தில்) யார்?

வேதத்தை புரட்டி விடையை தேடுங்கள் கண்டுபிடிக்க இயலாதவர்கள் அடுத்த இதழைப் புரட்டுங்கள்

அதுவரை விடைபெறுகிறேன்.

தாரகை அண்ணா

## ஹரியற்....

(1) I him not it an arm of flesh I trust
In him whom promise never yet has failed
I place my confidence.

(2) Come disappointment come
Thou art not stern to me
Sad monitress I own thy sway
A votary and in Early day
I bend my knee to thee
From sun to sun
My race will run
I only bow and say my God
thy will be done

(3) AH what will idle words avil
lnless the heart could speak

(4) Would you behold the works of God
His wonders in the world abroad
So with the mariner and trace
The unknown regions of the seas

## திடப்படுத்தல் ஆராதனை

யாழ் தென்னிந்திய திருச்சபை சாவகச்சேரி தேவாலயத்தில் பேராயர் அதி வண கலாநிதி எஸ் ஜெபநேசன் உயிர்த்தெழுந்த ஞாயிறு அன்று 11 அங்கத்தவர்களுக்கு திடப்படுத்தலை கொடுத்து முழு அங்கத்தவர்களாக்கினார். இதில் சபைக குருவான வண P' R. நவீந்திர அனுகூலன் பேராயருக்கு இவ் வாராதனையில் உதவி புரிந்தார்

தொடர்ந்து அன்றைய தினமே அராலித் திருச்சபையில் இருவருக்கு பேராயரினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது

## புனித...

சகர் மகாகணம் எஸ். ஜெபநேசனுக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார். எமது ஆதினம் கிழக்குப் பகுதியில் பணியாற்றுவதால் அநேக பிள்ளைகள் பலனடைகின்றனர் என்றும் கூறினார். இறுதியாக சபைக் குருவின ஜெபத்துடனும், ஆசீர்வாதத்துடனும் இனிதே நிறைவுற்றது.

## கிரான்..

அருமநாயகமும் கலந்து கொண்டு உரையாற்றினார்

இறுதியாக அருட்திரு G. ஞானப்பிரகாசம் போதகரின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் இனிதே நிறைவேறியது

## YMCA புதிய நிர்வாகக் குழு

உடுவில் YMCAஇன் வருடாந்த பொதுக் கூட்டம் YMCA கட்டிடத்தில் 23 2 97ல் மாலை 4 மணியளவில் தலைவர் திரு வி மித்திரரஞ்சன் தலைமையில் வண வி இராஜ்குமார் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது.

இவ்வருடத்துக்கான புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு வி மித்திரரஞ்சன், உப தலைவர் திரு எம் ஸ்டீபன், கௌரவ செயலாளர் திரு எம் ஜெயராஜசிங்கம், கௌரவ பொருளாளர் திரு எஸ் ஆர் இயேசுபாலன், வேலை திட்ட உத்தியோகத்தர் திரு பி மகேந்திரகுமார்.

வண வீ இராஜ்குமார், திருமதி கே பவசிங்கம், திரு ஏ ஜீ பெர்ணாண்டோ ஆகியோர் சமய மேம்பாட்டுக் குழு, கல்விக் குழு, புனர்வாழ்வுக் குழு ஆகிய குழுக்களின் அழைப்பினராக தெரிவுசெய்யப்பட்டனர்.

## மரணம்

நவாலி திருச்சபையைச் சேர்ந்த திருமதி கண்மணி லோறன்ஸ் 21- 3- 97 அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வில்லியம் லோறன்ஸின் மனைவியும் காலஞ்சென்ற W. G. அன்னப்பாவின் சகோதரியுமாவார். நன்றி செலுத்தும் ஆராதனை 26- 3- 97 அன்று கொழும்புத் திருச்சபையில் வணக்கத்துக்குரிய A ஜெயகுமார் போதகரினால் நடத்தப்பட்டது.

# தெருக்குறள்

☐ எச்சத்தம் எங்கிருந்து கேட்டாலும் அச்சத்தம் மெய்நிகழ்ச்சியோ, பயிற்சியோ அறி

☐ கூட்டம் செல்லுமுன் அக் கூட்டம் தொடங்கும் நேரம் பழசா புதுசா தெளி

☐ எந்தவூரில் ரவுண்ட அப் என்று முதலறிந்து பயணம் செய்வதே அறிவு

☐ கூகைக்கும் ஆந்தைக்கும் கோட்டான் என்பதற்கும் ஊரடங்கு என்பது இல்

☐ வீடியோ, பேக்கரி, டியூசன். சைக்கிள் திருத்தல் நான்கு வகைப்பட்டதே தொழில்

☐ பெற்றோல் வருமென்று மண்ணெண்ணெய்க்கு மாற்றாதவர் உமிகுற்றி கை சோர்ந்தவர்

☐ பகலவன் ஒளிதரப் படுத்து தூங்குபவர் இரவெல்லாம் இருமிக் கொண்டிருப்பவர்.

☐ தாண்டிக்குளமுமில்லை தட்டாதெருவுமில்லை ஊரோடு உத்தியோகம் பெற்ற மகற்கு

☐ விறகு வாங்குமுன் அவ்விறகு கதவுப்பிளவா யன்னலா, மேசையா உணர்

☐ கொழும்பு செல்வது இப்பிறப்பில் நடக்குமென்று வாடியிருப்பவர் ஞாலம் கருதுபவர்.

தெருவள்ளுவர்

## இந்தக் குள..:

இந்தக் குளத்தில் இன்னும் எத்தனையோ பேர் கல்லெறிந்து கொண்டேயிருக்கின்றனர்; கூடியளவு மரண திரைக்கு அப்பாற் சென்றுவிட்டவர்களையே குறிப்பிட்டுள்ளேன். Peter Zellers, மற்றும் A. M ஹன்ரர் ஆகியோர் இன்னும் இருக்கிறார்களென்று எண்ணுகிறேன்.

In our course through life we meet persons who come to see us from different roads and from different corners of the world and what is set for them to do to us and what is set for us to do them will ail be done

– DICKENS

இப்பத்திரிகை வடடுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் ஜி. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.